யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

# கலைமாணிக் கற்கைநெறிக்கான அனுமதி–2021/2022

மேற்படி கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஆவணங்களின் மதிப்பீட்டு பெறுபேறுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கற்கைநெறியினை பதிவு செய்வதற்காக கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள், கீழே பட்டியல்ப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் (Annexure 01) கற்கைநெறியினை தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.கலைமாணி கற்கைநெறிக்கான பாடத்திட்ட அமைப்பு மற்றும் பாடங்கள் இணைக்கப்பட்டுள்ளது (Annexure 03).

பட்டியல்ப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் கீழ் குறிப்பிட்ட நிகழ்நிலை படிவத்தில் தங்களது விபரங்களை பூர்த்தி செய்து, மின்னஞ்சலுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணத்தின் பூரணப்படுத்தப்பட்ட வன்பிரதியினை (Hard Copy) பதிவின் போது சமர்ப்பிக்க வேண்டும் (விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளவும்)

***நிகழ்நிலை படிவத்திற்கான இணைப்பு : https://forms.gle/fJphbtSifWxz18Xu7***
***நிகழ்நிலை படிவத்தினை 18.10.2025 முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்***

## பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1) நிகழ்நிலை படிவத்தின் பூரணப்படுத்திய உறுதிப்படுத்தப்பட்ட வன்பிரதி
2) மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு (மூலப்பிரதி)
3) க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)

   அல்லது

   NVQ Level-4 சான்றிதழ் (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
4) க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
5) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
6) புகைப்பட உறுதிப்படுத்தல் படிவம் (Annexure 02)
7) திருமணச் சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
8) தேசிய அடையாள அட்டை (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
9) தற்போது வகிக்கும் பதவியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்

## கற்கைநெறிக்கட்டணம் தொடர்பான விபரம்

| வருடம் | கட்டணம் | கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலம் |
|---|---|---|
| 1ம் வருடம் | ரூபா.80,000.00 | பதிவின் போது செலுத்துதல் வேண்டும். |
| 2ம் வருடம் 1ம் அரையாண்டு | ரூபா.40,000.00 | இரண்டாம் வருட ஆரம்பத்திற்கு முன்பு செலுத்துதல் வேண்டும். |
| 3ம் வருடம் 1ம் அரையாண்டு | ரூபா.40,000.00 | மூன்றாம் வருட ஆரம்பத்திற்கு முன்பு செலுத்துதல் வேண்டும். |
| **மொத்தக் கட்டணம்** | **ரூபா.160,000.00** | |


முதலாம் வருடக் கட்டணமாகிய **ரூபா. 80,000.00** இனை **890042140004081** என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை பதிவு செய்யும் போது சமர்ப்பித்தல் வேண்டும். ஏனைய கட்டணங்கள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

பதிவினை மேற்கொள்வதற்காக, மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு ***தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேர ஒழுங்கின் பிரகாரம் 22.10.2025 தொடக்கம் 25.10.2025 மற்றும் 27.10.2025 வரையிலான காலப்பகுதியில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்***.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம், பதிவு செய்யவேண்டிய திகதி மற்றும் நேரம் போன்ற விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (Annexure 01). புகைப்படத்தினை உறுதிப்படுத்தும் படிவமும் (Annexure 02) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமுகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன், **கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.**

## <u>கொடுப்பனவுச்சீட்டின் மாதிரி</u>


PEOPLE'S BANK
மக்கள் வங்கி
வைப்புச்சீட்டு | Deposit Slip
Office Copy
கணக்கு இலக்கம் | Account Number: 890042140004081
திகதி | Date
கணக்குரிமையாளரின் பெயர் / Name of Account Holder: University of Jaffna
Give the following information only when a deposit of over Rs. 200,000/- is made by a person other than the Account Holder.
பெயர் / Name: Your Name
முகவரி / Address: Your Address
தொலைபேசி இல. / Tel. No.: T.P No.
தே.அ.அ. | கடவுச்சீட்டு | சாரதி அனுமதிப்பத்திர இல. NIC/P.P./D.L No.: NIC No
காரணம் / Purpose: B.Arts- Batch (IV) 2021/2022
பண வைப்பாளரின் கையொப்பம் / Cash Depositor's Signature: Your Signature

| Notes | ரூபா \| Rs. | சதம் Cts. |
|---|---|---|
| x 5000 | | |
| x 2000 | | |
| x 1000 | | |
| x 500 | | |
| x 200 | | |
| x 100 | | |
| x 50 | | |
| x 20 | | |
| x 10 | | |
| நாணயங்கள் Coins | | |
| மொத்தம் Total | 80,000.00 | |

Valid if Overprinted or Signed by an Officer
இக் கோட்டுக்குக் கீழே எதுவும் எழுத வேண்டாம் | Do Not Write Anything Below This Line
Checked by

<u>**விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**</u>

- உங்கள் கல்வித்தகைமை சான்றிதழ்களில் கொடுக்கப்பட்டுள்ள பெயருக்கும் விண்ணப்பப்படிவத்தின் கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள பெயருக்கும் முரண்பாடுகள் இருப்பின் அப்பெயர்கள் அனைத்தும் உம்மையே குறிக்கின்றன என்பதற்கு சத்தியக் கடதாசி ஒன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பெயர்களும் பிறப்புச் சான்றிதழில் கொடுக்கப்பட்டுள்ள பெயரும் வேறுபட்டால், திருத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். திருமணத்தின் காரணமாக பெயர் வேறுபட்டிருப்பின் திருமணச்சான்றிதழின் புகைப்படப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

- மின்னஞ்சல் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். மின்னஞ்சல் முகவரி இல்லாதோர் ஆரம்பிக்க வேண்டும்.

- பதிவுக்கு தேவைப்படும் கல்வித்தகைமையைப் பரிசீலிப்பதற்கு பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கு, பரீட்சை ஆணையாளராலும், வேறு பரீட்சைகளானால் பரீட்சை அதிகாரிகளாலும் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதி மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலன்றி வேறு சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பணம் செலுத்திய பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும். பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பதாரியின் கையொப்பம், மத வழிபாட்டு நிறுவனமொன்றின் தலைமை அதிகாரி, பட்டயக் கணக்காளர், அரசாங்க கல்வியதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது ஓய்வு பெற்ற அதிபர், கிராம சேவை அலுவலர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு ஆகியோரில் யாரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**முக்கிய குறிப்பு : *கலைமாணி கற்கைநெறிக்கான பாடத்திட்ட அமைப்பு மற்றும் பாட அலகுகள் இணைக்கப்பட்டுள்ளது (Annexure 03).அதன் அடிப்படையிலே கற்கைநெறி அமையும் என்பதை கவனத்தில் கொள்ளவும்***

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

*பிரதிப் பதிவாளர்,*
*திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
08.10.2025